# இயல் 6.4 - வடிவியல்

## பயிற்சி எண் :: 6.4.1.1.D

### கோணம் - வரையறை

## கோணம் - வரையறை




படம் - 1

படம்-**1** - ல் இரண்டு கோட்டுத்துண்டுகள் உள்ளன. அவை $\overline{BA}$ மற்றும் $\overline{BC}$ ஆகும்.

இவ்விரு கோட்டுத்துண்டுகளை ஒன்றன்மீது ஒன்று வைத்தால் நமக்கு படம்-**2** - ல் உள்ளது போன்ற அமைப்பு கிடைக்கிறது.




படம் - 2

கோட்டுத்துண்டு $\overline{BC}$ -யை $B$ முனையில் ஒரு விரலால் அழுத்திக்கொண்டு அதன் $C$ முனையை பிடித்து எதிர்ப்பு கடிகார திசையில் சுழற்றினால் நமக்கு படம்-**3**-ல் உள்ளது போன்ற ஒரு அமைப்பு கிடைக்கிறது.




படம் - 3

இவ்வாறு, $\overline{BA}$ என்ற கோட்டுத்துண்டிற்கும் $\overline{BC}$ என்ற கோட்டுத்துண்டிற்கும் இடையே உருவான அமைப்பிற்கு **கோணம்** எனப்பெயர்.

## கோணம் - விரிவாக்கம்




படம் - 1

கோணத்தில் உள்ள இரு கோட்டுத்துண்டுகளும் கோணத்தின் **பக்கங்கள்** எனப்படுகின்றன. கோணத்தின் பக்கங்கள் சந்திக்கும் $B$ எனும் புள்ளி, **முனை** எனப்படும். கோணத்தின் பக்கங்களை, $\overline{BA}$ மற்றும் $\overline{BC}$ எனக்குறிப்பிடுகிறோம்.




படம் - 2

$\overline{BA}$ மற்றும் $\overline{BC}$ எனும் இரு பக்கங்களுக்கு இடையில் உள்ள கோணத்தை $\angle ABC$ என குறிப்பிடுகின்றோம். இதை $\angle CBA$ எனவும் குறிப்பிடலாம். கோணம் அமையும் புள்ளி அதாவது, **முனைதான்** இரு குறியீட்டிலும் நடுவில் உள்ள ஆங்கில எழுத்தாக அமைவதை கவனிக்க.




படம் - 3

$\angle ABC$-என்பதற்கு $\overline{BA}$ எனும் பக்கத்திற்கும் $\overline{BC}$ எனும் பக்கத்திற்கும் இடைப்பட்ட, $B$ எனும் முனையில் உள்ள **கோணம்** என்று பொருள்.

## கோணம் - விரிவாக்கம்




படம் - 1

கோணத்தின் மதிப்பை படத்தில் உள்ளதுபோல் இரு பக்கங்களையும் இணைக்கும் விதத்தில் ஒரு வளைந்த அம்புக்குறி இட்டோ அல்லது ஒரு வளைந்த கோடு இட்டோ, காண்பிக்கிறோம்.




படம் - 2

கோணத்தின் மதிப்பை உதாரணமாக $45^\circ$ என்பது போல் கோணத்தின் பக்கத்தில் உயரே ஒரு சிறிய வட்டமிட்டு குறிப்பிடுகின்றொம். இதை 45 பாகை எனக்கூறுகிறோம். கோணத்தை அளக்கும் கருவியை பாகைமானி என அழைக்கிறோம். படத்தின் உச்சியில் அது காண்பிக்கப்பட்டுள்ளது.




படம் - 3

இவ்விரு கோணங்களிலும் $B$ எனும் முனையில் ஏற்படும் கோணங்கள், இடத்திலும் திசையிலும் வேறுபட்டுத் தோன்றினாலும், அவை கோண அளவில் மாறுபடிவதில்லை என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.


Sum & solution prepared on Saturday 12th June, 2021 :: 11:20 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.